(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 81 ]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, ஏப்பிறல் 07, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0655 / '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) துறைமுகங்கள் விமானசேவைகள் அமைச்சிற்காகவும் அவ்வமைச்சுக்குச் சொந்தமான ஏதேனும் கம்பனிக்காகவும் கடந்த 4 வருடங்களாக இற்றை வரையில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினை வருடாந்த அடிப்படையிலும், அலுவலக இடத்திற்காக வாடகைக்கு அமர்த்துவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) இக்காலப்பகுதியில் இவ்வாகனங்களுக்கான எரிபொருளுக்கென செலவிடப் பட்ட மொத்தத் தொகையினை அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் நூற்றுவீதமாகவும்,

(ii) வாடகைக்குப் பெறப்பட்ட அலுவலக இடத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) குத்தகைக்கு கட்டிடம் பெறப்பட்ட காலத்தினையும் அதற்கு வைப்புப்பணமாகச் செலுத்தப்பட்ட முற்பணத்தையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0897 / '08

2.

கௌரவ காமினீ ஜயவிக்கிரம பெரேரா,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பொருட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையப் பொறுப்பதிகாரிகளின் பெயர்ப் பட்டியல், அவ்வுத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்ற நிறுவனங்கள் மற்றும் பதவிகள், அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்க ளுக்கு ஏற்ப தனித்தனியாக யாவை,

(ii) வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைத் தேர்தல்களின் பொருட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையப் பொறுப்பதிகாரிகளின் பெயர்ப் பட்டியல், அவ்வுத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்ற நிறுவனங்கள் மற்றும் பதவிகள், மாவட்ட ரீதியில் தனித்தனியாக யாவை,

(iii) இதற்கிணங்க கிழக்கு, வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைத் தேர்தல்களின் போது வாக்கெடுப்பு நிலைய மட்டத்தில் மற்றும் சாவடி இலக்கங்களின் படி வாக்குக் கணிப்பீட்டு பிரதம உத்தியோகத்தர் உட்பட ஏனைய உத்தியோகத்தர்களது பெயர்ப்பட்டியல், முகவரிகள் மற்றும் சேவையாற்றுகின்ற நிலையங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) கிழக்கு, வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைத் தேர்தல்களின் போது செயற்பட்ட கணினி அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் பெயர், பதவிகள் மற்றும் நிறுவனங்கள் தனித்தனியாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0945 / '08

3.

கௌரவ லக்ஷ்மன் நிபுனஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) ஆரம்ப பிரேதப் பரிசோதனை அறிக்கையில் தெனியாய மொரவக்கவில் வசித்த திருமதி ஜே. கே. பிரேமலதாவின் மரணம் கழுத்து நெரிக்கப்பட்டமை மற்றும் முகம் அழுத்தப்பட்டமை காரணமாக ஏற்பட்ட மூச்சு திணரலால் இடம் பெற்றுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2004.07.19 ஆந் திகதி படுகொலை செய்யப்பட்ட அவரின் மரணத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபர்களை கைது செய்து விசாரணைகளை நடத்துமாறு அவரின் கணவரால் மேன்மை தங்கிய ஜனாதிபதிக்கும், பாதுகாப்புச் செயலாளருக்கும், சட்டமாதிபருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) ஜனாதிபதி செயலகத்தினால் 2006.08.11 ஆந் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் இதனை விசாரிக்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பிரதி பொலிஸ்மாஅதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

அவர் அறிவாரா?

(இ) பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளரினால் 2007.10.03, 2007.12.12, 2008.02.14, 2008.04.01, 2008.06.27 ஆந் திகதிய கடிதங்கள் மூலம் பொலிஸ் மாஅதிபரிடமிருந்து அறிக்கையொன்று கோரப்பட்டிருந்த போதிலும் எத்தகைய பதிலும் அனுப்பி வைக்கப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) பொலிஸ்மாஅதிபர் உட்பட குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் இந்த படுகொலை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்காமைக்கான காரணங்கள் என்ன என்பதையும்,

(ii) பாதுகாப்பு அமைச்சுக்கு குறிப்பிட்ட பதில் கடிதம் அனுப்பி வைக்கப்படாமைக்கான காரணம் என்ன என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0991 / '08

4.

கௌரவ பேமசிறி மானகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) தனிநபர்கள் என்ற வகையில் அரசாங்கத்திற்கு வருமான வரி செலுத்து கின்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) தனிநபர்கள் மீது அறவிடப்படுகின்ற வருமான வரிகளின் மூலம் கடந்த இரண்டு வருடங்களில் ஈட்டிய தொகை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப் பாரா?

(இ) தனிநபர்கள் மீது வருமான வரி அறவிடப்படுகின்ற போது கடைபிடிக்கப் படுகின்ற வருடாந்த வருமான எல்லை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1084 / '08

5.

கௌரவ ஜினதாச கித்துலகொட,— சுகாதார நலத்துறை, போசனை அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) தேசிய இரத்த மத்திய நிலையம் உள்ளிட்ட இரத்த வங்கியினால் பயன் படுத்தப்பட்ட காலாவதியான இரத்தப் பரிமாற்றக் கருவித் தொகுதிகளின் பெறுமதி எவ்வளவு,

(ii) களஞ்சியங்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட காலாவதியான இரத்தப் பரிமாற்றக் கருவித் தொகுதிகளின் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சட்ட விரோதமாகவும் அதேபோன்று சுகாதார ஒழுக்கவியல்களுக்கு முரணாகவும் கவனமின்றி அல்லது மோசடியான விதத்தில் செயலாற்றியுள்ள குறித்த அமைச்சின் உத்தியோகத்தர்கள் தொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாது,

(ii) இதே செயற்பாட்டுடன் தொடர்புடைய, தேசிய ஆஸ்பத்திரியின் மத்திய இரத்த வங்கியின் மொத்தக் கையிருப்புப் பதிவேடுகளை மாற்றிப் போலியான மொத்தக் கையிருப்புப் பதிவேடுகளைத் தயாரித்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் இதுவரை விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதா,

(iii) இதனோடு தொடர்புடைய உத்தியோகத்தர்கள் யாவர்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1111 / '08

6.

கௌரவ ரஞ்ஜித் அலுவிஹாரே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) இலங்கை மத்திய போக்குவரத்து சபையின் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) பதவிக்கு யார் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும்,

(ii) அவரது முழுப்பெயர் மற்றும் சொந்த முகவரி என்ன என்பதையும்,

(iii) அவரது கல்வித் தகமைகள் மற்றும் தொழில் தகமைகள் என்ன என்பதையும்,

(iv) அவர் எந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார் என்பதையும்,

(v) அவரது அடிப்படைச் சம்பளம், அனைத்து கொடுப்பனவுகளுடன் கூடிய சம்பளம், பெறும் ஏனையச் சலுகைகள், மற்றும் கொடுப்பனவுகள் எவை என்பதையும்

அவர் இந்த சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0693 / ' 08

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த 10 வருடங்களுக்கான —

(i) நாட்டின் மொத்த தொழிற்படை எவ்வளவு என்பதையும்,

(ii) அரச மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த தொழிற்படையினர் எவ்வளவு என்பதை தனித்தனியாகவும்,

(iii) ஆயுதப்படையினர், பொலிஸ், துணைப்படையினர் மற்றும் ஏனையோர் என்றவகையில் பொதுத்துறை தொழிற்படையின் பங்குபற்றுதல்கள் எவ்வளவு என்பதை தனித்தனியாகவும்,

(iv) மேற்படி வினா (i), (ii) ஆகியவற்றின் பிரகாரம் நாட்டிற்கு ஏற்படும் மொத்தச் செலவு (மொத்தச் சம்பளம்) எவ்வளவு என்பதையும்

வருடாந்த அடிப்படையில் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i), (அ)(ii) இன் பிரகாரம் ஓய்வூதியத்திற்கான மொத்தச் செலவு எவ்வளவு என்பதையும், அடுத்த 15 வருடங்களுக்கு ஓய்வூதியத்தை செலுத்துவதற்கு எவ்வளவு தேவை என்பதையும்,

(ii) மேற்படி (அ) (iii) இன் பிரகாரம் அமய ஊழியர்கள் அல்லது உறுதிப்படுத் தப்படாத ஊழியர்களின் எண்ணிக்கை என்ன என்பதை தனித் தனியாகவும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1102 / '08

8.

கௌரவ ஜினதாச கித்துலகொட,— நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டிலுள்ள மொத்த சதுப்பு நிலங்கள் இறுதியாக எந்த ஆண்டில் இனங்காணப்பட்டது என்பதையும்,

(ii) அப்போது தீவிலிருந்த சதுப்பு நிலங்களின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அத்துமீறி சதுப்பு நிலங்களை மீட்டல் சம்பந்தமான தகவல்களை அறிந்து கொள்வதற்காக இலங்கை காணி மீட்டல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் பின்பற்றுகின்ற வழிமுறை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) சதுப்பு நிலங்களை இனங்கண்டு அவற்றை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான வேலைத் திட்டமொன்று இருக்கின்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1112 / '08

9.

கௌரவ ரஞ்ஜித் அலுவிஹாரே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) இலங்கை மத்திய போக்குவரத்து சபையின் போக்குவரத்து கணக்கு உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பவர் யாரென்பதையும்,

(ii) அவரது முழுப் பெயர் மற்றும் சொந்த முகவரி யாவையென்பதையும்,

(iii) அவரது கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் யாவை யென்பதையும்,

(iv) அவர் மேற்படி பதவிக்கு எந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளாரென்பதையும்,

(v) அவரது அடிப்படை சம்பளம், அனைத்துக் கொடுப்பனவுகளும் அடங்கிய சம்பளம், ஏனைய சலுகைகள் மற்றும் கொடுப்பளவுகள் யாவையென்ப தையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன் ?

1142 / '08

10.

கௌரவ காமினீ ஜயவிக்கிரம பெரேரா,— கமத்தொழில அபிவிருத்தி, கமநல சேவை அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) கமநல அபிவிருத்தி அதிகார சபை 2002.12.31 ஆம் திகதியன்று ஒழிக்கப் பட்டதாக 2004.02.31 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமைகளின் பிரகாரம் இழப்பீட்டை பெற்றுக்கொண்டு சேவையிலிருந்து விலகுவதற்கும், அரச சேவையில் உள்ளீர்க்கப்படுவதற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டதென்பதையும்,

அவர் அறிவாரா ?

(ஆ) (i) இழப்பீடு பெற்றுக்கொண்டு சேவையிலிருந்து விலகாத பல்வேறு பதவி பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்கள் எத்தனை பேர் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதையும்,

(ii) குறிப்பிட்ட பதவிப் பிரிவுகளுக்கேற்ப தகுந்த கடமைப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி பதவிப் பிரிவுகளில் உதவி பணிப்பாளர் /கமநல ஆராய்ச்சி மற்றும் விவசாய விளைவுப் பெருக்க உத்தியோகத்தர் பதவிகளை வகிக்கின்ற நிறை வேற்று உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் பெற்றுக்கொண்டுள்ள சேவை திறமைகளுக்கேற்ப கடமைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) மேற்படி உத்தியோகத்தர்களிடமிருந்து பயன்மிக்க சேவையை அரசாங்கம் பெற்றுக்கொள்வதாயின் அவை யாவை என்பதையும்,

(v) மேற்படி (ஆ) (iii) உத்தியோகத்தர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுடன் இணைக்கப்பட்டு தற்போது எவ்வளவு காலம் ஆகின்றது என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

1146 / '08

11.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2008 ஆம் ஆண்டு கொழும்பு பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வந்த, மற்றும் சத்திர சிகிச்சைக்குள்ளாக்கப்பட வேண்டுமென இனங் காணப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) இருதய சத்திர சிகிச்சைக்காக பதிவு செய்யப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) சத்திரசிகிச்சை செய்யப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய எனினும் மருத்துவமனை வசதிகளுக்கமைய 2008 ஆம் ஆண்டில் சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) 2005, 2006, 2007 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்த முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை வெவ் வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0704 / ' 08

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு;—(2)

(அ) தேசிய சேமிப்பு வங்கி (தே.சே.வ.) 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்திய ICICI வங்கியிடமிருந்து கடனாகப் பெற்று அப்பணத்தை அரசாங்கத்துக்கு கடனாகக் கொடுத்துள்ளதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கடன் பெறுவதிலும் பின்னர் அதனைக் கடனாக வழங்குவதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளின் முழு விபரங்களையும்,

(ii) தேசியசேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை இதனை ஒத்த கொடுக்கல் வாங்கல்களில் இதற்கு முன்னர் ஈடுபட்டிருந்ததா என்பதையும்,

(iii) அவ்வாறாயின், அவை யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை —

(i) அத்தகைய கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கு அதனைக் கட்டுப் படுத்தும் நியதிச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அத்தகைய வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதில் உபாயத்திட்டம் மற்றும் ஏற்படக்கூடிய அபாயம் தொடர்பாக கவனம் செலுத்தியதா என்பதையும்,

(iii) மேலே சொல்லப்பட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அரசாங்கத் தினால் அல்லது நிதி, திட்டமிடல் அமைச்சினால் அல்லது திறைசேரி செயலாளரினால் பணிக்கப்பட்டதா என்பதையும் அத்தகைய பணிப்பு களுக்கான காரணத்தையும்,

(iv) மத்திய வங்கியின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதா என்பதையும்,

(v) குற்றவியல் தண்டனைக் கோவையின் நியதிகளின் பிரகாரம் தண்டிக் கத்தக்க அதிகாரத் துஷ்பிரயோகச் செயலொன்றில் மேற்சொல்லப்பட்ட அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனரா என்பதையும்,

(vi) அதன் பொறுப்புகள் மற்றும் வகைகூறும் பொறுப்பு ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு விரிவான அபாய மீளாய்வை மேற்கொண்டிருந்ததா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1113 / ' 08

13.

கௌரவ ரஞ்ஜித் அலுவிஹாரே,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) கொழும்பு 10, மாளிகாவத்தை , ரஜபொகுண வீதியில் வதியும் திருமதி டபிள்யூ. எல். பி. சிறியாவதியினால் மாளிகாவத்தை புதிய நகரத்தில் அமைந்துள்ள ரஜபொகுண எனும் ஸ்நான கிணறு சுமார் 32 வருட காலமாக பராமரித்து நிருவகிக்கப் படுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) வருடாந்தம் வரி செலுத்தி இற்றை வரை இவர் நிருவகித்துவந்த மேற்படி கிணற்றை வேறு பிரிவினருக்குப் பெற்றுத்தருவதற்கு முயற்சிப்பது எக்காரணத் தினால் என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(இ) (i) மேற்படி கிணற்றுக்கு அருகில் புத்தர்சிலைக் கூடமொன்றை அமைக்கும் போது அதை உடைத்து சுமார் 5 இலட்சம் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளன ரென்பதைதயும்,

(ii) மேற்படி இடத்தில் வேறு சமய வழிபாடுகளை நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஒன்பது பிள்ளைகளுக்குத் தாயான திருமதி சிறியாவதிக்கு தொடர்ந்தும் மேற்படி கிணற்றை நிருவகிப்பதற்கு ஆவன செய்வதற்குரிய நடவடிக்கை அவர் எடுப்பரா?

(உ) இன்றேல், ஏன்?

1147 / '08

14.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2008 ஆம் ஆண்டு கொழும்பு தெற்கு களுபோவில போதனா வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக வந்த மற்றும் சத்திரசிகிச்சைக்கு உள்ளாக்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) இருதய சத்திர சிகிச்சைக்காக பதிவு செய்யப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iii) சத்திரசிகிச்சை செய்யப்பட்ட இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட வேண்டிய எனினும் மருத்துவ மனை வசதிகளுக்கமைய 2008 ஆம் ஆண்டில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) 2005, 2006, 2007 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்த முடியாமல் போன இருதய நோயாளர்களின் எண்ணிக்கை வெவ் வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1161 / '08

15.

கௌரவ காமினீ ஜயவிக்கிரம பெரேரா,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையை கலைக்கும்போது நட்டஈடுபெற்றுக் கொண்டு சேவையிலிருந்து விலகாத பதவி வகுதிகளைச் சார்ந்த உதவிப் பணிப்பாளர்கள் / கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் விளைச்சல் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் தொடர்பாக முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால், கமத்தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு அமைச்சின் செயலாளருக்கும் கமத்தொழில் அதிகாரசபையின் ஒழிப்போனுக் கும் பிரதிகள் சகிதம் வரவு செலவு திட்ட பணிப்பாளர் நாயகத்தை விழித்து DMS/ A மற்றும் L 05 இலக்கமும் 2003.07.03 ஆம் திகதியும் கொண்ட கடிதம் முலம் ஆலோசனை வழங்கப்பட்ட (I) (II) பிரேரணையை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி பிரேரணையை அமுல்படுத்துவதற்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள திட்டம், பிரேரணை யாவையென்பதையும்,

(ii) இவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு இயலாமல் போயிருப்பின், அதற்கான காரணம் யாதென்பதையும்

(iii) கமத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை நடைமுறையில் இருந்தபோது இவ்வுத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகள் தற்போதும் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த உத்தியோகத்தர்களை மேற்படி (அ) இல் காட்டப்பட்டுள்ள பிரே ரணைக்கேற்ப அரச சேவைக்கு உள்வாங்கிக் கொள்வதற்கு கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்க ளிலுள்ள வெற்றிடங்கள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில், மேற்படி பதவி வகுதிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) மேற்படி உதவிப்பணிப்பாளர்கள் /கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் விளைச்சல் மேம்பாட்டு உத்தியோகத்தர்களை அரச சேவைக்கு உள்வாங்கி மேற்படி பதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சர்,— தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்),— தவணை தவறுகையிலுள்ள வரிகளை அறிவிடுவதற்கென காலத்தால் பிணிக்கப்பட்ட முறையில் சீர்வடிக்கம் செய்யப்பட்டதும் துரிதமானதுமானதொரு நடைமுறையொன்றுக்கு ஏற்பாடு செய்வதற்கும் தவணை தவறுகையிலுள்ள வரிகளை குறித்த சில சூழ்நிலைகளில் பதிவழிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சர்,— நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்),— 2009 ஆம் ஆண்டில் 9 ஆம் இலக்க, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

3.

நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை நிலவடிவமைப்புக் கலைஞர்கள் நிறுவகம்,— இலங்கை நிலவடிவமைப்புக் கலைஞர்கள் நிறுவகத்தை தாபிப்பதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

4.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

5.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்று சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

6.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2),— 7 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளு மன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் 2009 ஏப்பிறல் மாதம் 20 ஆம் திகதி திங்கட்கிழமை சபை அமர்வு நாளாக இருக்குமாக.

7.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 3),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2009 ஏப்பிறல் மாதம் 20 ஆம் திகதி திங்கட்கிழமை மு. ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

8.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,- சிறப்புரிமை (இல.1),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பாலித ரங்கே பண்டார, தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2008 நவம்பர் மாதம் 11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப் படுத்தப்படுமாக.

9.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,- சிறப்புரிமை (இல.2),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பாலித ரங்கே பண்டார, தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2008 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப் படுத்தப்படுமாக.

10.

கௌரவ விஜயதாஸ ராஜபக்ஷ,__ சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"எஸ். பீ. நாவின்ன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2009 ஏப்பிறல் மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— இதற்கு முந்திய பிரேரணை மூலம் கடன்படலுக்கு அதிகாரமளிக்கப்பட்ட தொகைகளுக்கும் கூடுதலாக நூற்றி

ஐம்பதாயிரம் மில்லியன் ரூபாவிற்கு (150,000 மில்லியன் ரூபா) மேற்படாத தொகையொன்றினை இலங்கை அரசாங்க திறைசேரி உண்டியல்களை இலங்கையில் வழங்குவதன் மூலம் கடனாகப் பெறப்படலாமெனவும், அந்நோக்கத்திற்காக நிதி, திட்டமிடல் அமைச்சருக்கு (417 ஆம் அத்தியாயமான) உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின்கீழ் தேவைப்படும் சகல அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*3.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 12 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

## 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 12

2007 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் இரண்டாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "நூல் அச்சிடல், விளம்பரம் மற்றும் விற்பனைக்கான முற்பணக்கணக்கில்" — கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 2,250,000,000 இலிருந்து ரூபா 3,736,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின்ஆகக்குறைந்தஎல்லை — ரூபா 2,250,000,000 இலிருந்து ரூபா 2,500,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — ரூபா 4,000,000,000 இலிருந்து ரூபா 6,000,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 250,000,000 வரை.

(இக்கட்டளை 2008.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,

2009.02.13

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*4

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2009.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான ) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதிகள் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2009 பெப்ரவரி மாதம் 03 ஆந் திகதிய 1587/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி)

*5

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009 சனவரி 20 ஆம் திகதிய 1585/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*6

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009 பெப்புரவரி 03 ஆம் திகதிய 1587/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*7.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி 26 ஆம் திகதிய 1590/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*8.

உள்ளூரதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*14.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*19.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*25.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— ``(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*26.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

27.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

ஸ்ரீ பாத கல்பவருக்ஷ் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

31.

விசேட தேவைப்பாடுகள் கொண்ட சிறுவர்களுக்கான கோசல தூல்லாவ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.